27 நவம்பர் 2022

# Newbec

NEW WAY OF BEING CHURCH

திருவருகைக்காலத்தின் முதலாம் ஞாயிறு

**மண்ணுலகிற்கு உப்பும் உலகிற்கு ஒளியும்:** ஒன்றிப்பு, பங்கெடுப்பு, மறைத்தூது

மாதாந்திர கருப்பொருள்:

**உலக இளையோர் தினம் (நவம்பர் 20)**




## விழிப்பாயிருங்கள்; ஆயத்தமாய் இருங்கள்

இன்றைய வாசகங்கள் அனைத்துமே "விழிப்பாயிருங்கள், ஆயத்தமாயிருங்கள்" என்னும் செய்தியைத் தான் நமக்குக் கூறுகின்றன. இன்றைய ஞாயிறு, புதிய திருவழிபாட்டு நாட்காட்டியைத் தொடங்குவதாகவும் அமைகின்றது. மேலும் திருப்பலிகளின்போது மத்தேயு நற்செய்தியில் இருந்துதான் வாசகங்கள் வாசிக்கப்படும்.

இறைவாக்கினர் எசாயாவின் முன்னறிவிப்பு நமக்கு ஆண்டவரின் வாக்குறுதியை நினைவூட்டுகிறது. ஆண்டவரின் இல்லம் மாட்சியுறும், அவரின் போதனைகளுக்காகவும், அவரின் வழிகாட்டுதல்களுக்காகவும் எதிர்நோக்கோடு காத்திருக்கும் மக்கள் அவரை நோக்கி ஈர்க்கப்படுவர்; அவரின் மக்களாக வாழ்வர் என்ற செய்தி அவர்களுக்கு அறிவிக்கப்படும். கடவுள் தம் அரசை நிலைநிறுத்தும் காலம் இது. நீதிக்கான காலம், அமைதிக்கான காலம். அவரின் இரண்டாம் வருகைக்காகக் காத்திருக்கும் நாம் அவருடைய ஒளியில் நடப்பதே இறைவனின் அழைப்பு.

புனித பவுல் கூறுகிறார், நாம் எதிர்பார்த்துக் காத்திருக்கும் காலம் இதுவே. வீணாக்குவதற்கு இன்னும் நேரம் இல்லை. ஆண்டவர் தேவையில்லை என்னும் மனநிலைக்கும், தீயச் செயல்களுக்கும் எதிராக நாம் எச்சரிக்கையாக இருக்கவேண்டும். அவருடைய குரலில் உள்ள அவசரத்தை நாம் உணரவேண்டும். விழித்துக்கொள்ள இதுதான் சரியான நேரம். ஒழுங்காக நாம் நடந்துகொள்ள வேண்டும்; தள்ளிப்போடக்கூடாது. நம்முள் இருக்கும் இருளை ஒழித்துவிட்டு, கிறிஸ்துவின் கவசமான ஒளியை அணியவேண்டும். இது தான் சரியான நேரம்.

இயேசு தம்மைப் பின்பற்றுவோரிடம் நோவாவையும் பெரும் வெள்ளத்தைப் பற்றியும் பேசுகிறார். அப்போது என்ன நடக்கும் என்று யாருக்கும் தெரியாது. ஒரு திருடன் வீட்டிற்குள் நுழைய வருவதை அறிந்தால் அவர் கட்டாயம் விழிப்பாயிருப்பார் என்று தம்மைப் பின்பற்றுபவர்கள் எளிதாகப் புரிந்துகொள்ள வீட்டு உரிமையாளரின் உவமையைக் கூறுகிறார். அதுபோலவே, மானிடமகனும் எப்போது வருவார், வந்து நீதித்தீர்ப்பை வழங்குவார் என்று யாருக்கும் தெரியாது. நாம் அறிந்துகொள்ளாமலும் உதவியற்ற நிலையிலும் இல்லாமல் இருப்பதற்காகவே இயேசு அவரின் வருகைக்காக, நம்மை எப்போதும் விழிப்பாய் இருக்குமாறு கூறுகிறார்.

திருவருகைக்காலம் நம்மைத் தயாரிக்கும்காலம், நாம் அறிந்துள்ள நீதித்தீர்ப்பில் நாம் சிக்கிக்கொள்ளாமல், விழிப்புடன் இருக்க வேண்டும். ஒவ்வொரு ஆண்டும், திருஅவை மீண்டுமொரு வாய்ப்பை இத்தயாரிப்பின் வழியாக, நமக்கு அளிக்கிறது. எதிர்நோக்கு, அமைதி, மகிழ்ச்சி ஆகிய வாக்குறுதிகளைக் கொண்டுவரும் கிறிஸ்துபிறப்புப் பெருவிழா, இயேசு நம் உள்ளங்களில் வந்து தங்கிட தேவையான தயாரிப்பையும் நம் திருஅவை நமக்கு வழங்குகின்றது. ✣

**மனனம் செய்ய இந்த வார வசனம்:**

எனவே, விழிப்பாயிரு. உன்னில் எஞ்சியிருப்பதை உறுதிப்படுத்து. அது இறக்கும் தருவாயில் உள்ளது.

(திருவெளிப்பாடு : 3:2)

**இன்றைய வாசகங்கள்:**

எசாயா: 2: 1-5;

திருப்பாடல்: 122: 1-2, 4-9;

உரோமையர்: 13: 11-14;

மத்தேயு: 24: 37-44.

INTERNAL CIRCULATION ONLY
BUL 48/2022
*Published by:* Peninsular Malaysia Pastoral Team
api@archkl.org